# மல்லாகத்தின் வரலாறும் அதன் அபிவிருத்தியும்

தொகுத்தவர்:
திருமதி கோகிலா மகேந்திரன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்)

வெளியீடு:
கிராம அபிவிருத்திச் சங்கம்
மல்லாகம்.
13 - 03 - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகத்தின் வரலாறும் அதன் அபிவிருத்தியும்

தொகுத்தவர் :
திருமதி கோகிலா மகேந்திரன்
( உதவிக் கல்விப் பணிப்பாளர் )

முன்னாள் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும்,
வலி-வடக்குப் பிரதேசத் தலைவருமான
அமரர் சுவாமிநாதன் ஸ்ரீபாஸ்கரன் அவர்களின்
நினைவாக இந்நூல் வெளிவருகிறது. 1982 ஆம் ஆண்டு
இவர் தலைவர் பதவி ஏற்ற பின் இடம்பெற்ற
வரலாறும் அபிவிருத்தியும் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

வெளியீடு :
கிராம அபிவிருத்திச் சங்கம்
மல்லாகம்.
13 - 03 - 2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# மல்லாகத்தின் அபிவிருத்தி

இலங்கைத் தீவின் வடபால் உள்ள யாழ்ப்பாணக் குடா நாட்டில் தெல்லிப்பழைக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் வடக்குத் தெற்காக ஒடுங்கி கிழக்கு மேற்காக நீண்ட கிராமம் மல்லாகம்

மல்லாகம் 'பாரிஷ்' மல்லாகம், அளவெட்டி, ஏழாலை, ஈவினை புன்னாலைக்கட்டுவன், குராவத்தை ஆகிய கிராமங்களை உள்ளடக்கியது.

மல்யுத்தத்தில் சிறந்து விளங்கிய வீரர்கள் பலரின் அகமாக அது இருந்திருக்கலாம் என்பது உலகம் 'அகம்' என்ற முடிவைக் கொண்ட சுன்னாகம், பண்ணாகம் போன்ற கிராமங்கள் பல யாழ்ப்பாணத்தில் இருப்பது கவனத்திற்குரியது. 'அகம்' என்பது தமிழ்ச் சொல்லே என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

''இக் கிராமத்தில் ''சித்தர்'' என அழைக்கப்பட்ட சிற்றம் பலம் என்பவர் வாழ்ந்தார். அவர் பெரிய வலிய உடல்வாகு கொண்டவர். அக் காலத்தில் வல்லைவெளி ஊடாக வல்லிபுரக் கோயிலுக்குச் செல்வது பயங்கரமான அனுபவம். அம்மயன், கரியன் நாகன் என்ற மூன்று கொள்ளையர் அடியார்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கினர். இதனை அறிந்தார் 'சித்தர்'.

ஒரு நாள் மாலை மங்கும் நேரத்தில் வீரர்கள் சிலருடன் வல்லையை அடைந்தார். சித்தர் கொள்ளைக் கூட்டத் தலைவனான அம்மயனைத் தொண்டைக் குழியில் பிடித்துக் கொண்டனர் மல்லாகம் வீரர்கள். இது 1920 களில் மல்லாகத்தில் வாழ்ந்த மூத்தோர் சொன்ன கதை. இக் கதை 'மல்லாகம்' என்ற பெயர்க் காரணத்தை உறுதி செய்யும் கதை.

மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் 700 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்டது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தில் பல கோயில்களையும் இடித்து ஒழித்த காலத்தில் இந்தப் பிள்ளையார் கோயிலையும் அணுகினர் எனவும், ஏதோ ஒரு காரணத்தினால் உட்புக முடியாது திகைத்துப் பின்வாங்கினர் எனவும் மூல விக்கிரகத்தைப் பூஜை செய்த அந்தணர் கூரையில் செருகிக் காப்பாற்றினர் என்றும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் கோயில் அமைந்த பல ஆண்டுகளின் பின்னர் சிவஸ்ரீ சின்னையர் அவர்களின் சுற்றத்தவர் சிவஸ்ரீ சீனிஐயர் அவர்களின் திருமுருகன் கோயிலை அமைத்தார்.

பழம் பிள்ளையார் கோயிலின் பரிவார மூர்த்திகளாகத் தண்டாயுதபாணி, வைரவர், சந்தான, கோபாலர் நிலையங்கள் நிறுவப் பெற்றன. நவக்கிரக பீடமும் அமைக்கப்பட்டது. 1927 இல் நடந்த கும்பாபிஷேகத்துடன் அலங்காரத் திருவிழாக்களும் ஆரம்பமாகின. 1944 ம் ஆண்டு நிகழ்ந்த கும்பாபிஷேகத்துடன் பழம் பிள்ளையாருக்குக் கொடி மரம் நிறுவப்பட்டுத் தேர் தீர்த்தத்துடன் கூடிய பெருந் திருவிழாக்கள் ஆரம்பமாகித் தொடர்ந்து வருகின்றன.

சுன்னாகம், மல்லாகம் ஆகிய ஊர்களின் எல்லைப் புறத்தில் ஆல், அரசு, மருது, தாழை ஆகிய மரங்களும் குளமும் மருதநிலமும் ஒருங்கே அமையப் பெற்ற இம்புசியப்புல வயலில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார் ஸ்ரீ அரிகர புத்திர ஐயனார் பெருமான். பல நூறு ஆண்டுகளுக்கு முன் இவ்வூர் மக்கள் இவ்விடத்தில் சிவ குடிசை அமைத்து வணங்கி வந்தார்கள்.

இவ்வாலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக்கதை ஒன்றுண்டு. சுன்னாகத்தைச் சேர்ந்த 'பெரியார்' என்ற விவசாயப் பெருமகன் தனது வயலை உழும் போது கலப்பைக் கொழுவில் ஏதோ ஒரு பொருள் தடக்கியது. பல முறை முயற்சித்தும் அதை நகர்த்த முடியாததால் தன் கைகளால் அவ்விடத்தை அகழ்ந்த போது ஐயப்பனின் திரு உருவ விக்கிரகம் தோன்றியது. அவர் அதைக் கொண்டு தென் திசையாகத் குடில் அமைத்து வழிபட்டு வரலானார். பின்னர் கோயில் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப் பட்டபோது, அங்கு வந்த துறவி ஒருவர் கிழக்கு முகமாக வாசலை அமைக்குமாறு பணித்தார். இதுவும் ஐயனின் திருவிளையாடல் என்று கருதிக் கோயில் கிழக்கு நோக்கிக் கட்டப்படலாயிற்று. காலப் போக்கில் மூலஸ்தானம், கொடிமரம், தேர் போன்ற திருப்பணிவேலைகளும் செய்யப்படலாயிற்று, ஐயப்பனின் ஆலயத்தில் அன்று தொட்டு இன்று வரை சனிக்கிழமை தோறும் அபிஷேக ஆராதனை நடைபெற்று அன்னதானம் வழங்கப்படுவது ஓர் சிறப்பம்சம் ஆகும்.

எமது நாட்டிலிருந்து மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்குத் தொழில் புரியச் சென்ற ஐயப்பன் பக்தர்கள், இவ்வாலயத்தின் மகோற்சவ காலமாகிய பங்குனி மாதத்தில் ஊர்களுக்குத் திரும்பி விடுவார்கள்.



ஆலயத்திற்கு வரும் முதியோரிடம் ஐயனாரைப் பற்றிக் கேட்டால் "அவர் நீர்க்குமிழியைச் சாட்சியாக வைத்து நீதி மன்றத்தில் நீதி வழங்கச் செய்தார்" என்று கூறுவார்கள். இக் கோயிலில் பல காலம் நிகழ்ந்து வந்த பலியிடும் நிகழ்ச்சி நிறுத்தப்பட்டு விட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள மிகவும் தொன்மை வாய்ந்த விநாயகர் ஆலயங்களில் ஒன்று நீலியம்பனைப் பிள்ளையார் ஆலயமாகும். சுமார் 300 வருடங்களுக்கு முன் 'நீலி' என்ற வயோதிப அம்மையார் இப்பகுதியில்ஒரு பனைமர அடியில் விநாயக விக்கிரகம் அமைத்துப் பூசித்து வந்ததாகவும், அந்த அம்மையாரின் பக்தி மேலீட்டினால் அவருடை வேண்டுதலுக் கிணங்கக் கருணைக் கடலாகிய விநாயகப் பெருமான் தற்பொழுது திருக்குளம் அமைந்துள்ள அதே இடத்தில் ஓர் நீர் ஊற்றினைப் பெருகச் செய்த அற்புதம் கண்டு அப் பகுதி யாழ் பழங்குடி மக்கள் விநாயகருக்கு கோயில் எழுப்பி வழிபாடு செய்யத் தொடங்கினர் என்று கர்ண பரம்பரை வரலாறு ஒன்று உண்டு. காலப்போக்கில் இந்த ஆலயம் மிகவும் வளர்ச்சி அடைந்து மல்லாகத்தின் தென் பகுதியில் குளமும் பழனியும், குடிமனைகளும் பசும் வயல்களும், தெங்கு, ஆல், அரசு போன்ற பெரு விருட்சங்களும் சூழ்ந்த ஓர் அமைதியான வழிபாட்டு இடமாகத் திகழ்கின்றது.

மல்லாகம் கிராமத்தில் மிகப்பழமை வாய்ந்ததும், முக்கியமானதுமான வைரவர் ஆலயம் கைலாயவளவு சிவஞான வைரவர் ஆலயமாகும். சுமார் 280 வருடங்களின் முன் சின்னத்தம்பி என்பவரின் தாயார் தானாக முளைத்த ஆலமரம் ஒன்றின் கீழ் பத்தைகள், கற்கள், புதர்கள் நிறைந்த இடத்தின் மத்தியில் வைரவர் சூல மொன்றை வைத்து வழிபட்டு வந்தார். அவர் இவ்வாறு மறைவாக வணங்கியமைக்கு அக்கால ஆட்சியாளரான கிறிஸ்தவ ஐரோப்பியர் சைவமத வழிபாட்டு முறைகளை எடுக்க விரும்பி உறுத்தல்களும் இன்னல்களும் அளித்தமையே காரணமாகும்.

ஆட்சியாளரின் உறுத்தல் குறைந்த நேரத்தில் இவ்வம்மையாரின் மகனான சின்னத்தம்பியும் மனைவியாரும், கற்கள் புதர்களை அகற்றி வெள்ளி செவ்வாயில் விளக்கேற்றியும் ஆண்டுக்கொருமுறை பொங்கியும் வந்தனர். திரு சின்னத்தம்பி அவர்களின் மறைவின் பின் மனைவியார் இவ் வழிபாடு முறைகளை மிகப் பக்தியுடன் பின் பற்றியதுடன் 'கண் கொல்லை' எனப் பெயர் கொண்ட தனது காணியின் 2 பரப்பை இவ் வழி பாட்டிடத்திற்குக் கொடுத்து அதைப் பராமரிக்குமாறு கூறிக் காலம் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலப் போக்கில் றங்கூன் போஸ்ட் மாஸ்டர் வேதவனத்தார் என்பவர் 4 கப்புகளைக் கொண்ட ஒரு கொட்டகையை அமைத்து கோயில் வழிபாட்டு முறையை ஆரம்பித்தார்கள். 1880 இல் இவ்வாலயம் சுண்ணாம்புச் சாந்தினால் கட்டப் பட்டது. 1990 ம் ஆண்டில் இருந்து இங்கு அலங்கார உற்சவம் நடைபெற்று வருகிறது. 1958ம் ஆண்டளவில் மூலஸ்தானம் புனர அமைக்கப்பட்டது.

மல்லாகம் பெரிய தம்பிரான் கோயில் வரலாறு சுமார் இரு நூறு ஆண்டு பழமையானது. ஆதியில் மூன்று சூலங்களை ஒரு ஓலைக் குடிசையில் வைத்து வணங்கி வந்தனர். 1888 இல் இதனை ஒரு மடாலயக் கட்டிடமாகக் கட்டி அதனுள் பெரிய தம்பிரானை வைத்து வணங்கி வந்தனர்.

மருத மரங்களின் நிழலும் குளமும் அமைதியான சூழலும் தென்பகுதி வயலும் இக் கோயிலுக்கு அழகு சேர்ப்பன ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, ஆகிய தினங்களில் இக் கோயி லில் மாலைப் பூஜை நடைபெற்றுக் கட்டுச் சொல்லுதலும் இடம் பெறும்.

இவ்வாலயத்தின் மூலஸ்தான மூர்த்திகளாகப் பிள்ளையார், சிவன், அம்மன் ஆகியோர் விளங்கப் பரிவார மூர்த்திகளாக நாச்சிமார், முருகன், வீரபத்திரர், ஞானவைரவர், துர்க்கை, அனுமான், புற்றடி நாகதம்பிரான், காவல் வைரவர் ஆகியோர் உள்ளனர்.

வைகாசி 3-ம் திகதி சாடிமனையில் ஒளியேற்றி அங்கிருந்து கொடிச்சேலை பெரியதம்பிரான் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப் பட்டுக் கொடியேற்ற வைபவம் நடைபெறும். 8-ம் நாள் சாடி மனையில் பொங்கல் ஆரம்பித்துக் கோயிலுக்கு எடுத்துச் செல்லப் படும். மறுநாள் பொங்கல்ப் பூஜை ஆராதனைகள் நடைபெற்றுத் தீக்குளிப்பும் நடைபெறும். 15-ம் நாள் சாடிமனையில் பூஜை ஆரம்பித்துப் பெரிய தம்பிரானில் கொடி இறக்கும் வைபவமும் நடைபெறும்.

மல்லாகம் மேற்குப் பகுதியின் அழகு மிளிர அற்புதம் நிறைந்த கோயிலாக இருப்பது வீரபத்திரர் ஆலயமாகும். ஏறத்தாழ 200 ஆண்டு பழமை வாய்ந்த இக் கோயிலின் தல விருட்சம் நாவல். ஆதியில் மூதாட்டி ஒருவருக்கும் வேறு சில பக்தர்களுக்கும் இவ் விடத்தில் உலா வருவதாகக் காட்சி கொடுத்திருக்கிறார் வீரபத்திரர். அக்காணியின் வடகிழக்குப் பகுதியில் உள்ள நாவல்



மரத்தின் கீழ் அவர்கள் வீரபத்திரரை வணங்கி வந்தனர். மூதாட்டியின் மகன் வைத்தியர் மூத்ததம்பி அந் நாவலின் கீழ் ஒரு விநாயகர் விக்கிரகத்தையும் வைத்து வணங்கி வந்தார். பின்னர் அந்நாவலின் கீழ் நிரந்தரக் கொட்டில் அமைக்கப்பட்டுப் பூஜைகள் நடைபெற்றன. 1940 களில் ஆலயம் பெரிதாகக் கட்டப்பட்டு, கருங்கல்லினால் ஆன மூல விக்கிரகம் அமைக்கப் பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஏறக்குறைய ஏழு தலைமுறை வரலாற்றைக் கொண்டது. கோணப்புல ஞான வைரவர் கோயில். மரத்தடிச் சூல வழிபாடாக ஆரம்பிக்கப்பட்ட வழிபாடு 1910-ம் ஆண்டளவில் ஓலையால் வேயப்பட்ட கொட்டிலாக வளர்ந்தது. 1927 இல் கல்லினால் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், தரிசன மண்டபம், நந்தி, பலிபீட மண்டபம் என்பன அமைக்கப்பட்டன. கர்ப்பக்கிருகத்தின் மேல் ஸ்தூபி கல்லினால் அமைக்கப்பட்டது. மடப்பள்ளி, திருமஞ்சனக்கிணறு என்பன அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. விக்கிரகத்தில் ஏற்பட்ட சிதைவு களினால் புதிய மூலவிக்கிரகம் அமைக்கப்பட்டு 1935ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1958இல் மூன்றாவது முறை யாகவும் மூல விக்கிரகம் அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நடை பெற்றது. தல விருட்சம் பாலை மரமாகும்.

மல்லாகத்தின் விஸ்வகர்ம குலத்தோரால் குல தெய்வமாகப் பூசிக்கப்படும் காளிகாதேவி ஆலயம் நூறு ஆண்டுகளுக்கு மேல் தொன்மையானது. அவயன் சீமா என்ற இடத்தில் சிறு ஆல யத்தில் இருந்து அருள்பாலித்த தேவிக்கு 1930ம் ஆண்டளவில் சுண்ணாம்புச் சுவருடன் கூடிய ஆலயம் அமைந்தது. அப்போது ஐம்பொன்னால் ஆன விக்கிரகம் ஒன்றும் பரிவார மூர்த்தியாக வைரவ மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. தற்போ திருக்கும் ஸ்தூபியும் மகாமண்டபமும் 1956ம் ஆண்டளவில் அமைக்கப்பட்டன. அத்துடன் வைரவ மூர்த்திக்குத் தனி ஆலயம் அமைக்கப்பட்டது. பிள்ளையார் முருகன் நந்தி பலி பீடம் ஆகிய பரிவார மூர்த்திகளுடன் மூல மூர்த்திக்கும் கருங்கல் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருமஞ்சனக் கிணறும் மடப்பள்ளியும் அமைக்கப்பட்டன. 1951ம் ஆண்டு மகாகும்பா பிஷேகம் நடைபெற்றது.

ஏழாலை, கோட்டைக்காடு, மயிலங்காடு, களவாவோடை சூராவத்தை ஆகிய குறிச்சிகளின் சிறுபான்மைத் தமிழ் மக்க ளிடையே 1927ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. சாளம்பை முருகமூர்த்தி கோயில், ஏழாலை தெற்குச் சைவ விருத்திச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் இதனைப் பரிபாலித்து வருகிறது. 1926ம் ஆண்டு சைவ அடியார்களுடன் அழகர் சுவாமி என்பவர் கதிர்காம யாத்திரையில் கலந்து கொண்டார். பின்பு சேர்ந்து சென்ற அடியார்களுடன் திரும்பமறுத்துக் கதிர்காமத்திலே சில மாதங்கள் தங்கிவிட்டார். இவரைக் காணாது பெற்றோர், மனைவி, மக்கள் தவித்தனர். என்ன அதிசயம்! ஒரு நாள் காலை அவர் தலை மொட்டை அடித்து காவி உடை உடுத்துத் தலையில் திருநீற்றுப் பொதியுடன் வந்தார். திருநீற்றுப் பொதியில் ஒரு அழகிய பெரிய வேல் இருந்தது. மாணிக்க கங்கைக்கரையில் ஒரு சிவனடியார் தோன்றி அவ்வேலைக் கொடுத்து இவ்விடம் கொண்டுவந்து ஆதரிக்கும்படி கூறி மறைந்தாராம் வேல் தந்த சிவனடியாரைக் கதிர்காமச் சூழலில் எங்கும் தேடியும் காணவில்லையாம்.

அவ்வேல் ஒரு சிறு கொட்டிலில் அமைந்தது. ஆலயம் வளர்ந்து கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம், கொடிஸ்தம்ப மண்டபம் ஆகிய யாவும் வெள்ளை வைரக் கற்களால் கட்டப்பட்டுள்ளது.

இவ்வளவு இந்துக் கோயில்களுக்கும் இடையே மல்லாகத்தில் இரண்டு கிறிஸ்தவ தேவாலயங்களும் உள்ளன. ஒன்று புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயம். மற்றையது புதுமை மாதா தேவாலயம்.

புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம் குளமங்கால் பகுதியில் 1886இல் ஓலைக்குடிசையாக ஆரம்பிக்கப்பட்டது. புதிய கட்டிடத்தின் அடிக்கல் 1914 இல் நாட்டப்பட்டு 1942இல் ஆலய பீட அபிஷேகம் நடைபெற்றது. யாழ். மறை மாவட்டத்தில் உள்ள பீட அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு சில ஆலயங்களில் இதுவும் ஒன்று. இச்சுற்று வட்டாரத்தில் உள்ள றோமன் கத்தோலிக்கத் தேவாலயங்களில் இது மிகவும் கம்பீரமான தோற்றத்தைக் கொண்டது.

புதுமை மாதா தேவாலயத்தின் வரலாறு சுவாமி ஞானப்பிரகாசருடன் தொடர்புபட்டது. 1914இல் சுவாமி அவர்கள் மல்லாகம் கிராமத்தில் தொண்டுசெய்ய வழிமீசாம் அமைப்பதற்குச் சென்றார். ஒரு தேவாலயம் கட்டுவதற்குச் சுவாமி தீர்மானித்தபோது திரு. டானியல் என்பவர் தனது வழிபாட்டுக் குடிசையை அரைவிலைக்குக் கொடுத்து உதவினார். இதனால் இவ்வாலயம் ஆரம்பத்தில் தானியேல் ஆலயம் என்றே அழைக்கப்பட்டது. பெனேற் அடிகளாரின் காலத்தில் இது புனருத்



தாரணம் செய்யப்பட்டது. தேவாலய முகப்பு மாற்றி அமைக்கப்பட்டது. எட்மன் மைக்கல் அடிகளார் காலத்தில் போட்டிகோ படிகள் கட்டப்பட்டன. ஆலய வளவில் இருந்த வேப்பமரம் தறிக்கப்பட்டு மாங்கன்றுகளும் செவ்விளநீர் கன்றுகளும் நடப்பட்டன. யோகராஜா அடிகளாரின் காலத்தில் தேவமாதா குழந்தை யேசுவுடன் உள்ள திருச்சுரூபம் கட்டப்பட்டது.

மல்லாகம் கிராமத்திற்கு வளம் சேர்ப்பவை மூன்று பாடசாலைகள். அவற்றில் முதலில் ஆரம்பிக்கப்பட்ட தற்போது யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என அழைக்கப்படும் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையாகும். இது 1817 இல் ஆரம்பிக்கப்பட்டு 1832இல் பத்து மாணவர்களுடன் அதிபர் திரு. ந. தில்லையம்பலம் தலைமையில் விருத்திபெற ஆரம்பித்தது. இப்பாடசாலையின் அமைவிடம் கற்களை உடைய மேடு பள்ளமாக, ஒழுங்கற்ற நிலப்பரப்பாக இருந்தமையால் இது கலட்டிப் பாடசாலை என அழைக்கப்பட்டது.

1935 முதல் 1945 வரை அதிபராக இருந்த திரு. அ. த. வைத்தியலிங்கம் என்பவர் பாடசாலையின் வளர்ச்சியில் கருத்தூன்றிக் கடமையாற்றியபடியால் அவர் இளைப்பாறும் காலத்தில் பாடசாலை 156மாணவர்களையும் 6 ஆசிரியர்களையும் கொண்டிருந்தது. இவர் ஓய்வு பெற்றதும் ஏழாலையைச் சேர்ந்த திரு. ஜே. தேவசகாயன் அவர்கள் (1946 – 1970) அதிபராகப் பெறுப்பேற்றிருந்த காலம் பாடசாலையின் பொற்காலம் எனப் பேசப்படுகிறது. சிரேஷ்ட உதவி ஆசிரியர் பண்டிதர் ச. பொன்னுத்துரை அவர்களும் அதிபருடன் இணைந்து அயராது உழைத்து வந்தார். 1953 இல் க. பொ. த. (சா/த) வகுப்பு (எஸ். எஸ். சி.) ஆரம்பிக்கப்பட்டது. வெளிவாரி உயர் கல்வி வகுப்புகள், லண்டன் வகுப்புகள், ஆசிரிய கலாசாலைப் புகுமுக வகுப்புகள் நடத்தப்பட்டதும் இவர்களின் முயற்சிக்கான சான்றுகளாகும்.

1958 அளவில் இப்பிரதேசத்தின் சிறந்த கல்வி நிலையங்களில் ஒன்றாக மிளிர்ந்த பாடசாலை, 1-1-1972 இல் 412 மாணவர்களுடனும் 14 ஆசிரியர்களுடனும் மல்லாகம் ம. வி. யுடன் இணைக்கப்பட்டது. மீண்டும் 1979 முதல் தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரையும் உள்ள கனிஷ்ட பாடசாலையாகத் தனித்து இயங்கத் தொடங்கியது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிஷனரிமார் கிறிஸ்தவப் பின்னணியில் சைவ மாணவர்களுக்குக் கல்விப் போதனையை மேற்கொள்வதை எதிர்த்து வடபகுதியில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. அங்ஙனம் உருவாக்கப்பட்ட பாடசாலைகளில் ஒன்று மல்லாகம் மகாவித்தியாலயம் 1860ம் ஆண்டளவில் இக்கல்லூரி மல்லாகம் பங்களா ஒழுங்கைக்கு வடக்கே ஒரு சிறு தற்காலிக அமைப்பில் இப்பாடசாலை ஆரம்பமானது. மாணவர்கள் வரவு அதிகரிக்க இடவசதியின்மையால் 1890 இல் பழம்பிள்ளையார் கோவிலுக்கு வடகிழக்கே வாங்கப்பட்ட வளவில் நீளமான மண்டபம் கட்டப்பட்டது. இது மல்லாகம் ஆண்கள் பாடசாலை என விளங்கியது. 1917இல் மயிலிட்டி சி. சுவாமிநாதன் அவர்கள் பாடசாலைத் தலைமைப் பதவியை ஏற்றுள்ளார். இக் காலத்தில் வித்துவான் சி. கணேசையா தமிழ் இலக்கியமும் இலக்கணமும் விசேடமாகக் கற்பிக்கும் வாய்ப்பை இப்பாடசாலை பெற்றது. இக்காலத்தில் தான் முதன் முதலாக இப்பாடசாலை மாணவர் பகிரங்கப் பரீட்சையாக ஆரம்பப்பள்ளி விடுகைச் சான்றிதழ் (E.L.S.C.) பரீட்சைக்குத் தோற்றினர்.

மல்லாகம் ஆண்கள் ஆங்கில பாடசாலை என்ற பெயரோடு இயங்கிய இப்பாடசாலை 1945இல் மல்லாகம் கலவன் பாடசாலை ஆயிற்று. 1951 முதல் 1970 வரை திரு. பொன்னையா அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். அவரது காலப்பகுதியில் முதன் முதலாக க. பொ. த. (சா/த) வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. விஞ்ஞான கூடம் அமைக்கப்பட்டது. 1955 இல் இரண்டாம் தரப் பாடசாலையாக இது தரம் உயர்த்தப்பட்டது. வள்ளுவர் மண்டபம் கட்டப்பட்டது. 1960ம் ஆண்டு இப்பாடசாலை வித்தியாபதியின் முகாமையின் கீழ்க்கொண்டு வரப்பட்டு 1961இல் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது.

மல்லாகம் பிரதேசத்தில் உள்ள மற்றொரு பாடசாலை குளமங்கால் றோ. க. வித்தியாலயம் ஆகும். இது 1880ம் ஆண்டில் யாழ். கத்தோலிக்க மறை மாவட்டத்தைச் சேர்ந்த அமல உற்பவத் தியாகிகள் சபையினரால் இரு ஆசிரியருடனும் 24 மாணவருடனும் ஆரம்பிக்கப்பட்டு 1910இல் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. 1935இல் சிறிய கட்டிடம் கட்டப்பட்டது. 1950களில் பங்குத் தந்தை ஆபிரகாம் அடிகளாரின் முயற்சியால் புதிய கட்டிடங்கள் அமைக்கப்பட்டன. 1960 இல் பத்துப்பரப்புக் காணியுடனும் மூன்று கட்டிடங்களுடனும் அரச பொறுப்பேற்றுக்கொண்டது.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதாகும். போதிய சான்றுகள் இல்லாவிட்டாலும் 1893 வரையில் ஒரு திண்ணைப்பள்ளியாகச் சுன்னாகத்தைச்



சேர்ந்த செவ்வந்திநாதர் சின்னப்பா என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு அவரது சகோதரர் சுவாமிநாதன் அவர்களால் (சீனியப்பா) நடத்தப்பட்டு வந்தது என்பதை அறியக்கூடியதாக உள்ளது. அதனால்தான் இன்றும் மு தி யோ ர் க ள் இதைச் சீனியப்பா பள்ளிக்கூடம்" என்று வழங்கி வருகின்றனர். திண்ணைப்பள்ளியாக இருந்த காலத்தில் இலக்கணப் பேரறிஞர். வித்துவான் சி. கணேசையர் அவர்கள் ஆசானாக இருந்து சைவத்தையும் தமிழையும் கற்பித்துள்ளார். 1917இல் இவர்களின் வழியில் தோன்றலான வன்னித்தம்பி செல்லப்பா என்பவர் காங்கேசன் துறை வீதியில் ஏழாவது மைலில் அமைந்துள்ள தமது சொந்த நிலத்தில் துணைவியார் விசாலாட்சியின் பெயரில் தற்போதைய கல்விக்கூடத்தை நிறுவி முகாமை செய்து வந்தார். 1951இல் பெரிய மண்டபம் கட்டப்பட்டது. 1960இல் கல்வி மறுமலர்ச்சியின் பயனாக இப்பாடசாலையும் அரசுடமை ஆக்கப்பட்டது.

இவ்வாறான பல கோயில்களையும் பாடசாலைகளையும் கொண்ட அழகிய அமைதியான கிராமமாக விளங்கிய மல்லாகத்தில் அபிவிருத்தி மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தோற்றத்துடன் புதுப்பொலிவு பெற ஆரம்பித்தது. 1953ம் ஆண்டு உயர்திரு, R. N. சிவப்பிரகாசம் அவர்களின் பெருமுயற்சியால் இச்சங்கம் உருவானது. உள்ளூராட்சி அதிகாரசபையிடமிருந்து இத்தகைய சங்கங்களுக்கு ஊக்குவிப்புப்பணம் வழங்கப்பட்ட காலம் அது. முதல் கூட்டத்தில் கொழும்புக் கச்சேரியின் இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் திரு. எம். செல்லத்துரை அவர்கள் தலைவராகத் தெரிவு செய்யபட்டார். 1960வரை அப்பதவியை வகித்தார், சங்கத்தின் ஸ்தாபகர் ஆர், என், சிவப்பிரகாசர் அவர்கள் 1953 முதல் 1956 வரை செயலாளராக இருந்தார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்த் தேர் தனைத் தொடர்ந்து வரும் கீரிமலைத் தீர்த்தம் ஆகியவற்றுக்கு நடந்து செல்லும் பாதகாரிய பக்தர்களுக்கு உதவு முகமாக மல்லாகத்தில் இராமலிங்கர் மடமும் கேணியும் இருந்தன. புதிய போக்கு வரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டு விட்டமையால் இந்த மடம் தேவையற்ற நிலையில் இருந்தது. திரு. செல்லத்துரை அவர்களின் தந்தை வழிப்பேரனுக்கு உரிமையான இந்த மடம் சங்கத்திற்கு அன்பளிப்பும் செய்யப்பட்டது. மூன்று பரப்புக் காணி கொண்ட நிலம் அது.

வலிகாமம் வடக்குக் கிராம அபிவிருத்திச் சங்கமும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து 4150/- செலவில் ஒரு கட்டிடத்தை அமைத்தனர். இதில் 1500/- அரச உதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை ஆகும். இதைத் தொடர்ந்து வலி – வடக்குக்கான நூலகக் கட்டிடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. 1984க்கும் 1986க்கும் இடைப்பட்ட காலத்தில் மேலும் நாலு அறைகளைக் கொண்ட கட்டிடமும் நீர்த்தாங்கியும் அமைக்கப்பட்டன.

இச் சங்கத்திற்கு 1961 முதல் 1964 வரை திரு. R. N. சிவப்பிரகாசம் அவர்களும் 1964 முதல் 1968 வரை திரு. எஸ் தாமோதரம்பிள்ளை அவர்களும் 1968 முதல் 1972 வரை திரு. ப. சபாரத்தினம் அவர்களும் 1978 முதல் திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் அவர்களும் தலைவர்கள் ஆயினர். 1972 — 1978 காலப் பகுதியில் சங்கம் இயங்கவில்லை.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் செய்யப்பட்ட சமூக அபிவிருத்தித் திட்டங்கள் பல நொறாட் நிறுவன உதவியுடன் 1982 இல் 125 மல கூடங்களும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் 1990 இல் 200 மல கூடங்களும் மல்லாகத்தின் ஏழைக் குடும்பங்களுக்குக் கிடைத்தன. 1988 இல் 97 வீட்டுக் கிணறுகளுக்குச் சிங்கப்பூரிலுள்ள நியூசிலாந்துத் தூதுவராலய நிதியுதவியுடன் சுற்று மதிலும் முன் முற்றமும் அமைத்துக் கொடுக்கப்பட்டது. 1982 இல் இக் கிராமைக் கிராமத்தில் 34 வீடுகளுக்கு அத்திவாரமும் மூலைத் தூண்களும் சுவர்களின் பகுதிகளும் கட்டிக் கொடுக்கப்பட்டன. இதற்குப் நொறாட் உதவி செய்தது. அரச நிதி உதவியுடனும் பொது மக்கள் நிதி உதவியுடனும் மல்லாகம் அளவெட்டி மயானத்திற்குச் சுற்று மதில் கட்டப்பட்டது. பிரான்சிலுள்ள ஏ. ரி. டி மொன்டே நிறுவனத்தின் உதவியுடன் மல்லாகம் பிரதான வீதிக்கு ரியூப் லைட்டுகள் பொருத்தப்பட்டன. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் மல்லாகம் அளவெட்டி வீதியில் உள்ள இரு மதகுகள் புனரமைக்கப்பட்டன. சிறுவர் பாதுகாப்பு நிதியம் (U.K) ஊடாகக் கனேடியத் தூதுவராலய நிதியுடன் மல்லாகம் வயல் வெளிப் பிரதேசத்தில் பத்துக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டன. சங்க நிதியில் இருந்து சங்க அளவில் ஐந்து அறைகள் கட்டப்பட்டதுடன் இரவுச் சந்தையும் மீன் விற்பனையும் நடத்தப்பட்டன கந்தரோடை மல்லாகம் வீதி மண் அணைத்துச் செப்பனிடப்பட்டது. பொது மக்கள் பாவனைக்காகப் பிரேத வண்டில் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டது. கெயர் தாபனம் ஊடாக யூ. எஸ் எயிட் விவசாய உதவித் திட்டத்தின் கீழ் 1991ல் மரக்கறிச் செய்கைக்காக 23 விவசாயிகளுக்கும் 1992 இல் குரக்கன் செய்கைக்காக 26 விவசாயிகளுக்கும், மரக்கறிச் செய்கைக்காக 16 விவசாயிகளுக்கும் உதவி கொடுக்கப்பட்டது.



மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் பல சுகாதாரத் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்றியது. 1981 இல் சங்கக் கட்டிடத்தில் அரசினர் மருந்தகம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டது.

1984 இல் சங்கக் கட்டிடத்தில் கால் நடை வைத்திய நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. கோப்பாய் லயன்ஸ் கழகம் ஊடாக 29 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

1980 களின் ஆரம்பம் தொடக்கம் நாட்டில் வன்செயல்களும் போர் நடவடிக்கைகளும் பெரும் எடுப்பில் தொடங்கி மக்களைப் பாதித்தன. வன்செயலால் பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளை வழங்கவும் சங்கம் பின்னிற்கவில்லை. 1983 இல் கொழும்பில் இருந்து அகதிகளாக வந்தோருக்கு உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. 1987 இலும் 1990 இலும் இடம் பெயர்ந்து வந்த மக்களுக்கு முதல் வாரத்தில் இருப்பிட உணவு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. 1988 இல் ஜேர்மனியிலுள்ள தயா கோனிஸ்கெஸ் வேர்க் தாபனத்தின் உதவியுடன் வலிகாமம் வடக்கில் உள்ள 870 விவசாயக் குடும்பங்களுக்கு மண் வெட்டிகளும் புல்லுச் சத்தகங்களும் வழங்கப்பட்டன. அதே காலத்தில் அதே நிறுவனத்தின் உதவியுடன் 1786 குடும்பங்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டன. வன்செயலால் விதவைகளாக்கப்பட்ட 29 பெண்களுக்குத் தையல் இயந்திரங்களும் 18 பெண்களுக்குப் பால் மாடுகளும் இதே காலத்தில் வழங்கப்பட்டன. வருடா வருடம் மல்லாகத்தில் வெள்ளத்தினால் இடம்பெயரும் குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கப்படுகிறது.

சங்கத்தின் வேலை வாய்ப்புத் திட்டமும் மிக நல்ல முறையில் தொழிற்பட்டு வந்தது. 1981 க்கும் 1983க்கும் இடைப்பட்ட காலத்தில் செயல்திறன் உள்ளோரும், செயல்திறன் அற்றோருமான சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையில் வேலை வாய்ப்பும் பெற்றனர். 1983 இல் 72 பேர் மத்திய கிழக்கில் வேலை வாய்ப்புப் பெற்றனர். 1987 இல் அவுஸ்திரேலிய தூதுவராலய நிதி உதவியுடன் தென்னந்தும்புத் தொழிற்சாலை ஒன்றுக்கான கட்டிடங்கள், தொட்டிகள், குழாய்க் கிணறு முதலியன அமைக்கப்பட்டன. 1988 இல் நெதர்லாந்துத் தூதுவராலயத்தின் உதவியுடன் இதற்கான இயந்திரங்களும் பெறப்பட்டன. இத் தொழிற்சாலையில் ஆரம்பத்தில் 180 பெண்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. 1990 இல் எம்மைப் பற்றிக் கொண்ட கொடிய போர் அரக்கனின் கைகள் எல்லாவற்றையும் விழுங்கி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவீடன் நாட்டின் டயாகொனிய என்னும் நிறுவனத்தின் உதவியுடன் 1987 இல் 140 பெண்கள் தென்னந்தும்புத் தொழில் பயிற்சி பெற்றனர். தொழில் இலாகா கிராம அபிவிருத்தி இலாகா ஆகியவற்றின் உதவியுடன் 70 பெண்கள் தையற் பயிற்சி பெற்றனர்.

இக்காலப் பகுதியில் மல்லாகம் மக்கள் பல்வேறு கடன் வசதித் திட்டங்களையும் அனுபவித்தனர் - 1981 இல் உலக தரிசன நிறுவனத்தின் உதவியுடன் கோழி வளர்ப்பிற்கும் மேசன் தச்சுத் தொழில்களுக்குக் கைக்கருவிகள் வாங்கவும் கடன்கள் வழங்கப்பட்டன. தாழ்ந்த பிரதேசத்தில் உள்ள 22 குடும்பங்களுக்கு நெதர்லாந்து தேசத்தில் உள்ள வஸ்ர நெக்ரை என்னும் நிறுவனத்திடமிருந்து கடன் அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அவுஸ்திரேலியாவில் உள்ள வெளிநாட்டுச் சமுதாய நிதி நிறுவனத்திடமிருந்து பெற்ற உதவியுடன் 54 பேருக்குப் பால்மாடு வளர்ப்பதற்கான கடன் வழங்கப்பட்டது. எமது அரச உதவியுடன் 20 விவசாயிகளுக்கு உப உணவு உற்பத்திக்கான கடன் வழங்கப்பட்டது. அதே போல நல்லின ஆடு வளர்ப்பிற்கும் கடன் வழங்கப்பட்டது.

சங்கத்தின் ஊக்குவிப்புத்திட்டத்தின் கீழ் 1990 இல் யு. எஸ். எயிட் நிறுவன உதவியுடன் பால்மாடு வளர்ப்பு நல்லினக் கடா வளர்ப்பு நல்ஆடு வளர்ப்பு ஆகியவற்றுக்காக மொத்தம் 200 பேர் நன்மை அடைந்தனர், சங்கம் மல்லாகத்தின் கோயில்கள், தேவாலயங்களுக்கும் ஊக்குவிப்புக் கொடுத்தது.

1975ம், 76ம், 77ம் ஆண்டுகளில் பழம் பிள்ளையார் தேர் உலாவி குஞ்சரக்கன்று குடை ஆலவட்டத்திருக் கோலத்துடன் தேர் வடந்தொட்டுக் களிறு நடைநடந்து விழாவை அலங்கரித்தது. மனதைவிட்டகலாத மாண்புள்ளது, 1986இல் பழம் பிள்ளையார் கோயிலின் திருமுருகன் தேர் விழாக்கள் ஆரம்பமாகின. ஆலய மண்டபங்கள் பல நவீனமாக எழுந்தன முருகன் கோயில் மூன் மண்டபத்திற்கு பன்னிரண்டு தூண்களைச் சங்கம் நிறுவிக் கொடுத்தது.

நீலியம்பனைப் பிள்ளையார் இக்காலப்பகுதியில் வசந்த மண்டபம், உள்சுற்றுப்புற வீதி மண்டபம், முன் மண்டபம், தண்ணீர்த்தாங்கி, புனரமைக்கப்பட்ட நந்தவனம் ஆகியன கொண்டு செழித்திருந்தன.

கைலாயவளவு சிவஞான வைரவர் கோயிலிலும் 1984ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. மண்டபத் திருத்த வேலைகள் நடந்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.



பெரிய தம்பிரான் கோயிலுக்கான மின் இணைப்பை 1982ல் கிராம அபிவிருத்திச் சங்கம் செய்து கொடுத்தது. வீரபத்திரர் கோயிலும் 1983இல் புனருத்தாரணம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கோணப்புல ஞானவைரவர் கோயிலிலும் வளர்ச்சி ஏற்பட்டது. 1960இல் இப்போது உள்ள உலோக விக்கிரகம் குடமுழுக்குச் செய்யப்பட்டது. 1972இல் திருமஞ்சனக்கிணறு திருத்தியமைக்கப்பட்டது. அதே ஆண்டில் ஆலய நிர்வாகசபை ஆரம்பிக்கப்பட்டு, கர்ப்பக்கிருகத் தூபி திருத்தி அமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் நிறைவேறியது. 1982இல் மடப்பள்ளியும் 1986இல் மணிக்கூட்டுக் கோபுரம், முன்மண்டபம், வசந்த மண்டபம், சுற்றுமதில் ஆகியனவும் அமைக்கப்பட்டன.

காளிகாதேவி கோயிலில் 1971ம் ஆண்டு ஒரு கும்பாபிஷேகமும், 1992ம் ஆண்டு மற்றொரு கும்பாபிஷேகமும் நிறைவேறின.

சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தில் பிள்ளையார், மகாலட்சுமி, வைரவர், காளி ஆகியோர் பரிவார மூர்த்திகளாக அமைந்தன.

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்ட கல்வித் திட்டங்கள் ஏராளம். கர்நாடக சங்கீதம், பரதநாட்டியம், மிருதங்கம், வயலின், புல்லாங்குழல், பண்ணிசை, ஆகியவற்றுக்கான வகுப்புக்களை அது மாணவருக்கு நடத்தியது. மாணவருக்கான இலவச ஆங்கில வகுப்புகளையும் அது நடத்தியது. ஐயாயிரம் நூல்களுடன் ஒரு நூல் நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. சங்கக் கட்டிடத்தில் வாசிகசாலை ஒன்று நிறுவப்பட்டது சிறுவர் பாடசாலை ஒன்றும் அங்கே அமைந்தது.

லண்டனில் உள்ள பியற்றிஸ் லிங் றஸ்ற் என்னும் தாபனத்தின் உதவியுடன் மல்லாகம் நீதிமன்ற வீதியில் ஒரு சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

மல்லாகத்தின் பாடசாலைகளும் இக்காலத்தில் விருத்தி அடைந்தன. மல்லாகம் கனிஷ்ட வித்தியாசாலை இக் காலத்தில் இரு கட்டிடங்களைப் பெற்றது மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் தொநாட் தாபனத்தின் உதவியுடன் இப் பாடசாலைக்கு மின்சார உதவியும் நீர் இறைக்கும் இயந்திர வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தது. 1990களின் ஆரம்பத்தில் திரு. மு. அருணையா அவர்கள் தலைமையில் இப்பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

480க்கும் மேற்பட்ட மாணவர்களையும் 15 ஆசிரியர்களையும் கொண்டிருந்தது.

அதே நேரத்தில் குளமங்காமல் றோ. க.த. க. பாடசாலைக்கு நியூசிலாந்துத் தூதுவராலய நிதி உதவியுடன் தண்ணீர்த்தாங்கி பைப்மூலம் தண்ணீர் விநியோகம், மூன்று மலகூடங்கள் அமைத்துக் கொடுத்தது சங்கம்.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் 1971இல் பாலர் வகுப்புக் கட்டிடம் ஒன்று புதிதாக நிர்மாணிக்கப்பட்டது 1982ல் இடுகுக்கூரைக் கட்டிடங்களுக்கு ஒடு போடப்பட்டது வித்தியாலயக் கட்டிடங்களைத் திருத்தியும் வித்தியாலயக் கிணற்றுக்கும் கைப்பம் அமைத்தும் உதவியது சங்கம்.

மல்லாகம் மகாவித்தியாலயமும் இக் காலத்தில் பாரியவளர்ச்சி கண்டது. 1980 இல் கல்லூரியின் கிழக்குப் பக்கத்தில் 6பரப்புக் காணி சுவீகரிக்கப்பட்டது. அங்கு வகுப்பறைகளும் தொழிற் கூடங்களும் அமைந்தன. பாடசாலையை விட்டு விலகியோருக்கான இயந்திரம் பொறிமுறைக் கல்வி, வீட்டு பின் சுற்றமைத்தல் போன்ற பாடங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1973 இல் இப் பாடசாலை மல்லாகம் மகாவித்தியாலம் என்ற பெயரைப் பெற்றது. 1980களில் திரு. அ. மகாதேவன் அவர்கள் அதிபரான காலத்தில் மாணவர்கள் தொகை இரட்டித்தது. மாணவர் சீருடை அணியும் வழக்கம் ஏற்படுத்தப்பட்டது. க. பொ. த. உ/த வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு, புதிய இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று கட்டிமுடிக்கப்பட்டது. சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது, கல்லூரிக்கீதம் யாக்கப்பட்டுப் படிக்கும் பழக்கம் உண்டானது. 1986இல் இங்கு முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் ஹோட்டல் முகாமைத்துவ வகுப்புகள் நடைபெற்றன. அதேவருடம் கிழக்குப்பகுதியிலும் இரு மாடிக் கட்டிடம் கட்டப்பட்டது. 1987இல் க. பொ. த. உ/த வர்த்தகப் பிரிவு ஆரம்பமானது.

1990இல் முறைசாராக் கல்விப்பிரிவின் கீழ் UNHCR உதவியுடன் தொழிலகத் தையல், உடையமைத்தல், ஆங்கில தமிழ் சுருக்கெழுத்தும் தட்டச்சும், மோட்டார் இலத்திரனியல் ஆகிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. 1990இல் வலைப்பந்தாட்டக் கரப்பந்தாட்டக் குழுக்கள் தோன்றின. 1991 இல் புதிய விஞ்ஞான ஆய்வு கூடம் திறந்து வைக்கப்பட்ட, அதேவருடம் இப்பாடசாலைக்கான கைப்பம்பி ஒன்றை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் வழங்கியது.



மல்லாகத்தின் விளையாட்டுத்துறைச் செயற்பாடுகளும் சங்கத்தின் மூலம் பெருவிருத்தி கண்டன. கிரிக்கட், உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குபெறுவதற்குக் கோஷ்டிகள் நிதி உதவி பெற்றன. 1983இல் இரு உதைபந்தாட்டக்கோஷ்டிகள் வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கு நடைபெற்ற போட்டிகளில் வெற்றி ஈட்டின. விளையாட்டு வீரர்களுக்கான கிரிக்கட் விளையாட்டு உபகரணங்கள், கைப்பந்துகள் என்பன பிரிட்டிஷ் தூதுவராலயத்தின் உதவியுடன் பெறப்பட்டன. சர்வதேச விளையாட்டுக்களை நடத்தக்கூடிய விளையாட்டரங்கை அமைக்கும் நோக்குடன் ஐந்து ஏக்கர்காணி கொள்வனவு செய்யப்பட்டது. இக்காணியின் பெரும்பகுதி கும்பலைக் குளத்தை ஆழமாக்கும் திட்டம் மூவாயிரத்து இருநூற்று நாற்பது கியூப் மண்ணால் நிரப்பப்பட்டது. இதற்கான நிதியை யு. எஸ். எயிட் நிறுவனம் வழங்கியது.

யுத்த மேகங்கம் மட்டும் எமது பிரதேசத்தை 1990களில் சூழ்ந்திரா விட்டால், மல்லாகம் இப்போது மிகப்பெரு அபிவிருத்தியைக் கண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மல்லாகம் தந்த மூன்று முத்துக்கள்

மேற்படி பெருமக்களை நினைவூட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். ஏழாம்கட்டை ஒழுங்கையை அணிசெய்த இல்லம் அமரர் சரவணமுத்து J. P. அவர்களின் இல்லம். இவர் ஒரு இளைப்பாறிய கல்வி அதிகாரி. சிறந்த சமூகத் தொண்டர். சொல்லில் கடுமை, செயலில் பரிவு. ஆலய கருமங்களிலும் புராண படனங்களிலும் விருப்போடு ஈடுபடுவர். தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தில் ஆடிச்சோதி விழாவை மிகமிகச் சிறப்பாக உபயமாக ஏற்று நடத்தியவர்.

அடுத்து சட்டத்தரணி R. N. சிவப்பிரகாசம் அவர்களை நினைவு கூரவேண்டும். சைவமும் தமிழும் மல்லாகம் பகுதியிலும் பொதுவாக யாழ். மண்ணிலும் சிறப்புற ஓங்கப்பணியாற்றியவர். இந்து சாதனப் பத்திராதிபராக இருந்து நேர்மையான பணி யாற்றியவர். துர்க்காதேவி ஆலய நிர்வாகசபையின் உபதலைவ ராக இருபது ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்து ஆலய வளர்ச்சி யில் பெரும்பங்கு கொண்டவர். கவிதைகள், கட்டுரைகள் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிப் பலருடைய பாராட்டையும் பெற்றவர்

அடுத்து அதிபர் ச. அம்பிகைபாகன் அவர்களை அறிஞர் உலகம் மறந்துவிடமுடியாது. கொழும்புத்துறை யோகர் சுவாமி களின் போதனையின் படி வாழ்ந்து உயர்வு பெற்றவர். இரு மொழிப்புலமையும் மிக்கவர். மாணவ சமுதாயத்தை அறிவிலும் பண்பாட்டிலும் உயரவைத்தவர். மக்கள் மனங்குளிர்ந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய அறிவுரைகளை வழங்குவார். பயனுள்ள பல நூல்களை எழுதி வெளியிட்ட பெருமை இவருக்கு உண்டு. கலைப்புலவர் நவரத்தினம் அவர்களின் நெருங்கிய நண்பராக விளங்கி கலை, கலாச்சார வளர்ச்சிக்கு வழிகாட்டிய பெரியார்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி

தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
ஸ்ரீலங்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org